மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 20–ம் நாள் வியாழக்கிழமை
அ.வ.எண். 142/21

பி.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: சரோஜா                                   தேதி : 20.11.25
வயது :                                          க/பெ : செல்லத்துரை
கிராமம் :                                        தொழில் :
                                                 மாவட்டம்:

---

<u>20.11.25 முதல் விசாரணை தொடர்ச்சி</u>

04.11.1985 ம் தேதி என் கணவர் 1ம் வாதியின் மனைவி பாக்கியத்திற்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் இணையவழி சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 1 ஆகும். 24.03.2003 ம் தேதி பரிபூரணம் எனக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் இணையவழி சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 2 ஆகும். 24.07.2017 ம் தேதி 8 ம் வாதிக்கு அவரது தாயார் பாக்கியம் சர்வே எண்கள் 755/3, 749/2B, 750/3A1, 750/7C, 750/6 ஆகிய சொத்துக்களை ஏற்பாடு செய்து கொடுத்ததற்கான ஆவணத்தின் இணையவழி சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 3 ஆகும்.

2.24.07.2017 ம் தேதி 1ம் வாதி 8 ம் வாதிக்கு பூர்வீக சொத்துக்களான 750/7C, 749/2A, 750/3A1, 750/3A3, 750/6, 755/3, 748/2B, 749/2B,

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.11.20 19:48:41 +0530

749/2D, 750/3A2 ஆகிய சொத்துக்களை ஏற்பாடு செய்து கொடுத்ததற்கான ஆவணத்தின் இணையவழி சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 4 ஆகும். 08.04.2019ம் தேதி தபசில் சொத்தில் 25 செண்டினை எனக்கு என் கணவர் எழுதிக்கொடுத்தற்கான ஆவணத்தின் இணையவழி சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 5 ஆகும்.

3.25.03.2022ம் தேதி நான் தபசில் சொத்திற்கு செலுத்திய தீர்வை ரசீதின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 6 ஆகும். 07.10.2025ம் தேதி தபசில் சொத்திற்கு என் பெயரில் உள்ள கூட்டு பட்டாவின் கணிணி நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 7 ஆகும். 07.10.2025ம் தேதி சர்வே எண்கள் 748/2B, 749/2A, 749/2B, 750/3A1, 750/3A2, 750/3A3, 750/6, 750/7C, 755/3 ஆகியவற்றிற்கு 8ம் வாதி பெயரில் உள்ள கணிணி பட்டாவின் இணையவழி நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 8 ஆகும்.

<u>குறுக்கு விசாரணை</u>

வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.11.20 19:48:47 +0530